
# அன்பு மக்களே!

WYD SEOUL 2027


தமிழ் கத்தோலிக்க மாதாந்த வெளியீடு ஆனி 2026 ஒளி 34 கதிர் 316

TAMIL CATHOLIC MONTHLY PUBLICATION JUNE 2026 YEAR 33 VOL 316






அருட் பணி எச். எஸ். தாவீது அடிகள்
யாழ் நூல் நிலைய எரிப்பில்
தீந்து போன இவரது இருதயம்


கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்.
(CTC NETWORK) https://ctcnw.org/

**ஸ்தாபிதம்**

ஆனி 1995

**முகவரி**

41 EARL STREET, TORONTO. ON.M4Y 1M4
CANADA.

**Email :** tamilcatholicpublication@gmail.com

Webside :https://ctcnw.org/

**தோலை பேசி :**

+1(647) 852-3141

**தயாரிப்பு + வெளியீடு**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

**ஆசிரியர் குழு**

திரு தோமஸ் டேவிட்

சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை

**ஆலோசனை குழு**

அருட் தந்தை வார்கீஸ் செல்வராஜா

அருட் தந்தை அந்தோனிப்பிள்ளை தோமஸ்

அருட் தந்தை யூபின் லோரன்ஸ்

**தெழில் நுட்ப உதவி**

திரு மரியதாஸ்

சகோ. மரீனா அந்தோனிப்பிள்ளை

**விநியோகஸ்தர்கள்**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்

தன்னார்வத் தொண்டர்கள்

**கிடைக்கும் இடங்கள்**

**ரொறொன்ரோ**

புனித அந்தோனியார் தேவயலயம்

புனித லூர்து மாதா தேவாலயம்

புனித ரோசா லீமா தேவாலயம்

புனித பர்னபாஸ் தேவாலயம்

புனித எயார் வேய்ஸ் தேவாலயம்

**மாக்கம்**

தோமாஸ்மோர் தேவாலயம்

போனிபஸ் தேவாலயம்

**டொன்மில்ஸ்**

புனித 23ம் அருளப்பர் தேவாலயம்

தமிழ் கத்தோலிக்க புதுவாழ்வுக்குழு

தமிழ் மொழ் கற்கும் வகுப்புக்கள்

மெக்கா சிற்றி வர்த்தக ஸ்தாபனங்கள்

**ஆதரவு**

கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்



கனடா தமிழ் கத்தோலிக்க இணையம்
Canada Tamil Catholic Network
https://ctcnw.org/



## அன்பு மக்களே


## உள்ளடக்கம்





௦௩. ஆசிரியர் பக்கம்



௦௪. இயேசுவின் திரு இருதய பெருவிழா



௦௫. மரியாவின் மாசற்ற இருதயம் பெருவிழா



௦௬. கிறிஸ்துவின் திருவுடல் திருவிழா
(Feast Of Corpus Christi)




௦௭. இயேசுவின் திரு இருதய அன்னை




௦௮ - ௦௯. செய்திகள்

௧௦. புனிதர்களான பேதுரு மற்றும் பவுல்,
அப்போஸ்தலர்கள், பெருவிழா



௧௧. புனித அந்தோனியார் திருவிழா



௧௨-௧௩. கனடா : புலம் - பேர் தமிழ் கத்தோலிக்க
குழந்தையை பிரசவித்த அன்னை

௧௪-௧௫. தமிழர் தாயக தந்தை எச்எஸ். ஜயசிந்த் சிங்கராயர் தாவீது
அடிகளார் (உலக தந்தையர் தின சிறப்புக் கட்டுரை

௧௬. உலக இளைஞர் தினம்



கனடா தமிழ் கத்தோலிக்க இணைய 2026 ஜூன் மாத "அன்பு மக்களே" சஞ்சிகை இயேசுவின் திரு இருதயத் திருவிழா மற்றும் கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தம் (Corpus Christi), ) மரியன்னையின் மாசற்ற இருதய திருவிழா ஆகியவற்றின் மீது ஒரு அழகான முக்கியத்துவத்தை அளிக்கிறது. இந்த மாதம் கிறிஸ்துவின் திருவுடல் மற்றும் திருஇரத்தம் திரு இருதயத்தின் உச்சகட்ட வெளிப்பாட்டைக் காண்கிறோம்—நம்மீதான அன்பினால் இயேசு தம்மையே முழுமையாகத் தாழ்த்திக் கொள்வதைக் காண்கிறோம். நற்கருணை நமது ஆன்மீக ஊட்டமாகும், அது நமது தனிப்பட்ட மற்றும் சமூக காயங்களைக் குணப்படுத்தும் உயிர் இரத்தம்.

இந்த மாதத்தை திரு இருதயத்திற்கு அர்ப்பணித்து, இயேசுவினுடைய குத்தப்பட்ட விலா எலும்பு நமது குடும்பங்களுக்கும், நமது சமூகங்களுக்கும், நமது திருச்சபைக்கும் ஒரு புகலிடமாக இருக்கச்செய்ய வேண்டியது கத்தோலிக்கர் எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை. நாம் களைப்புற்ற பயணிகளாக அல்ல, மாறாக நம் ஒவ்வொருவருக்காகவும் துடிக்கும் ஒரு இருதயத்தால் உருமாற்றப்பட்ட, மகிழ்ச்சியான சாட்சிகளாக திகழ அழைக்கப்படுகின்றோம்.

இயேசுவின் திருஇதயப் பக்திக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஜூன் மாதத்திற்கான திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், "உலகம் இரக்கத்தில் வளர வேண்டும்". நாம் ஒவ்வொருவரும் இயேசுவுடனான தனிப்பட்ட உறவில் ஆறுதலைக் காணவும், அவரது இதயத்திலிருந்து உலகத்தின் மீது இரக்கம் காட்டக் கற்றுக்கொள்ளவும் இறைவேண்டல் செய்வோம் என்று கூறியுள்ளார்.


இயேசுவின் திருஇதய விழாவைத் தொடர்ந்து வரும் சனிக்கிழமையன்று, திருஅவை மரியாளின் மாசற்ற இருதயத் திருவிழாவைக் கொண்டாடுகிறது. வரலாற்று ரீதியாக, இந்தப் பெருவிழா ஆவணி 22 அன்று உலகளாவிய ரீதியில் அனுசரிக்கப்பட வேண்டும் என்பதற்காக திருத்தந்தை பன்னிரண்டாம் பயஸ் அவர்களால் நிறுவப்பட்டது. இருப்பினும், திருத்தந்தை ஆறாம் பவுல் 1969 இல் இக்கொண்டாட்டம் இயேசுவின் திரு இருதயப் பெருவிழாவிற்குப் அடுத்ததாக கொண்டாடப்பட வேண்டும் என்று மாற்றினார். காரணம் இவ்விரு இதயங்களுக்கும் இடையில் இருக்கின்ற நெருங்கிய பிணைப்பை எடுத்துக்காட்டவே.

மேலும், உலகம் முழுவதும் தந்தையர் தின விழாவை கொண்டாடிக்கொண்டிருக்கும் இம்மாதத்தில், 1981 யூன் 01 இல், *உலகப்புகழ்பெற்ற யாழ் நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட கொடுமையை தாங்கமுடியாது, மாரடைப்பால் மரணித்த மங்கா மாணிக்கம் அருட் தந்தை எச். எஸ். தாவீது அடிகளாரை எம் தமிழர் தாயக தேசத்தின் தந்தையாக கனடா தமிழ் கத்தோலிக்க இணையம் கொண்டாடுவதில் பெருமை கொள்கிறது.* இவர் குறித்து இவ் சஞ்சிகையில் வரும் சிறப்பு கட்டுரையை படித்து, இலங்கை தமிழர் நாம் இவரது காவிய வரலாற்றை எங்கும் பறைசாற்றுவோம்.

ஜூன் 24 -இயேசுவின் வருகைக்கு முன்னோடியாக இருந்த யோவானின் பிறப்பு மிகச்சிறப்பாகக் கொண்டாடப்படுவதோடு, .ஜூன் 29 திருச்சபையின் தூண்களான புனித பேதுரு மற்றும் பவுல் திருத்தூதர்களின் மறைசாட்சிப் பெருவிழா, மனித மனங்களில் ஏற்படும் கொள்கைகள் வேறுபட்டிருப்பினும், கிறிஸ்துவில் அவைகள் ஒன்றுபடும் புதுமையும் எமது சமூக மற்றும் குடும்ப வாழ்வின் ஒற்றுமையை மேலோங்ச் செய்யும் என நம்புகின்றேன்.

2027 ஆவணி 03 முதல் 8 வரை நடைபெற இருக்கின்ற அகில உலக இழையோர் தினம் **தைரியம் கொள்ளுங்கள்! நான் உலகை வென்றுவிட்டேன். (யோவான் 16:33)** என்னும் கருப்பொருளில் நடைபெற இருக்கின்றது. இந்நிகழ்வின் நோக்கம்: **விசுவாசத்தை ஆழப்படுத்தவும், உலகெங்கிலும் உள்ள இளைஞர்களை ஒன்றிணைக்கவும் வடிவமைக்கப்பட்ட ஒரு முக்கிய இளைஞர் விழா மற்றும் ஆன்மீக யாத்திரை ஆகும். இந்நிகழ்வில் எமது தமிழ் சமூகமும் பங்கெடுக்க, "WYD சியோல் 2027"** என்னும் இணையதளத்தை பார்வையிடவும். இன்னும் பல சிறப்பான ஆக்கங்களோடு வெளிவரும் இவ் ஜூன் மாத சஞ்சிகையிகையை முழுமையாக நீங்கள் வாசிப்பதற்கு 30 நிமிடம், 33 விநாடிகள் எடுக்கும். ஆகையால். இந்த சஞ்சிகையை முழுமையாக வாசித்து உங்கள் விசுவாசத்தை ஆழப்படுத்த வேண்டுகிறேன். இவ் அழகான தமிழ் கத்தோலிக்க சஞ்சிகைக்கான ஆக்கங்களை ஸ்தாபிதம் பகுதியில் நீங்கள் காணும் தொடபுகள் ஊடாக எமக்கு அனுப்பி வைக்குமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி

அன்புடன் ஆசிரியர் டேவிட் தோமஸ்



# இயேசுவின் திரு இருதய பெருவிழா

இயேசுவின் திரு இருதயப் பெருவிழா என்பது, மனிதகுலத்தின் மீதான அவருடைய எல்லையற்ற, தெய்வீக அன்பின் அடையாளமாக இயேசுவின் திரு இருதயத்தைப் போற்றும் ஒரு முக்கிய கத்தோலிக்கப் பெருவிழாவாகும். இது எப்போதும் திருவுடல் பெருவிழாவைத் (பெந்தேகோஸ்தேக்குப் பிறகு 19 நாட்கள்) தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமையன்று கொண்டாடப்படுகிறது.

இந்தப் பெருவிழாவின் தற்கால முக்கியத்துவம், 1673 மற்றும் 1675-க்கு இடையில் இந்த பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த கன்னியாஸ்திரி புனித மார்கரெட் மேரி அலகோக் பெற்ற வெளிப்பாடுகளிலிருந்து உருவானது. இந்தத் தரிசனங்களில், இயேசு அவளுக்குத் தீப்பிழம்புகளாலும் முள் கிரீடத்தாலும் சூழப்பட்டிருந்த தனது இதயத்தைக் காட்டினார். மேலும் அதைக் கௌரவிக்க ஆண்டுதோறும் ஒரு பெருவிழாவைக் கோரினார், அத்துடன் இந்த பக்தியைக் கடைப்பிடிப்பவர்களுக்கு அருளை வழங்குவதாகவும் வாக்களித்தார்.

திருத்தந்தை ஒன்பதாம் பயஸ் 1856-ல் இதை கத்தோலிக்கத் திருச்சபையின் உலகளாவிய பெருவிழாவாக பிரகடணப்படுத்தினார். நற்கருணையின் திருவுடல் பெருவிழா என்பது இயேசுவின் அன்பான திரு இருதயத்தின் இறுதி வெளிப்பாடு என்பதை இது வலியுறுத்துகிறது

எரியும் இதயம் கடவுளின் அன்பின் எரிந்துகொண்டிருக்கும் தீயைக் குறிக்கிறது. அதே சமயம் முள் கிரீடமும் காயமும், மனிதகுலத்தின் பாவங்களையும் கல்வாரியில் நடந்த இறுதித் தியாகத்தையும் குறிக்கின்றன. இந்த பக்திமுறையானது, மாதத்தின் தொடர்ச்சியாக ஒன்பது முதல் வெள்ளிக்கிழமைகளில் திவ்விய நற்கருணையைப் பெறுபவர்களுக்கு எல்லையற்ற இரக்கமும் அருளும் கிடைக்கும் என்ற வாக்குறுதியை உள்ளடக்கியுள்ளது.


“இதயம்” என்ற வார்த்தையைக் கேட்கும்போது, நாம் எல்லாவற்றிற்கும் மேலாக பாசம், உணர்ச்சிகள், மனோபாவங்கள் ஆகியவற்றையே நினைக்கிறோம். திருவிவிலிய மொழியில் அதற்கு மிகவும் பரந்த அர்த்தம் உண்டு. அது ஒரு நபரின் முழுமையான விழிப்புணர்வு, அறிவு, சுதந்திரம் ஆகியவற்றைக் குறிக்கிறது. இதயம் ஒரு நபரின் உள்ளார்ந்த யதார்த்தத்தையும், சிந்திப்பதற்கான நமது விருப்பத்தையும் குறிக்கிறது.

அது நினைவுகளின் இருப்பிடம், தேர்வுகள் செய்யப்படும் மையம், திட்டங்கள் நிறைவேறும் இடம். இயேசு தனது இதயத்தினை காண்பித்து, “நான் உங்கள் மீது அன்பு கொண்டிருக்கிறேன்”, “உங்கள் வாழ்க்கையை நான் என் இதயத்தில் ஏற்றுக்கொள்கிறேன்” என்று கூறுகிறார்.

அதேபோல், அவர், “இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என்கிறார்... உங்கள் இதயத்தால் மற்றவர்களைக் கவனித்துக் கொள்ளுங்கள். வேறுவிதமாகக் கூறினால், நான் கொண்டிருக்கும் அதே மனோபாவங்களைக் நீங்களும் கொண்டிருங்கள், நான் எடுக்கும் அதே முடிவுகளை நீங்களும் எடுங்கள், “சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவர்களாக” எவ்வாறு வாழ வேண்டும் என்பதை நம் ஆண்டவர் இயேசுவின் ஈடு இணையற்ற இந்த பெருவிழா மூலம் கற்றுக்கொள்ளுவோம், இயேசுகைப்போல இரக்க இருதயம் உடையவர்களாக வாழ்வோம்.

இயேசுவின் திருஇருதய விழா எமது இதயங்களை இயேசுவின் இதயத்தைப் போல் ஆகப்பண்ணட்டும்.

திரு இருதயநாதன் தோமஸ் பேனாண்டோ



# மரியாளின் மாசற்ற இருதய திருவிழா

2026 ஆம் ஆண்டு, ஜூன் 13 ஆம் தேதி, சனிக்கிழமையன்று அன்னை மரியாளின் மாசற்ற இதயப் பெருவிழா கொண்டாடப்படுகிறது. இந்த அனுசரிப்பு, இயேசுவின் திரு இருதயப் பெருவிழாவைத் தொடர்ந்து வரும் நாளில் வருகிறது. இந்த ஆண்டுப் பெருவிழா ஒரு மாபெரும் உலகளாவிய ஜெப முன்னெடுப்பைக் கொண்டிருப்பதால் இது குறிப்பாகக் குறிப்பிடத்தக்கது: **உலகளாவிய அன்னை மரியாள் ஊர்வலம்:** ஜூன் 13 அன்று, உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கர்கள் ஜெபத்திலும் ஆராதனையிலும் ஒன்றிணைகிறார்கள். **உலகளாவிய பங்கேற்பு:** வடக்கு அயர்லாந்தின் டெர்ரியை மையமாகக் கொண்டு, ஆறு கண்டங்களில் உள்ள பங்குத்தலங்கள் நற்கருணை ஊர்வலங்கள், திருப்பலி மற்றும் ஜெபமாலை ஜெபங்கள் மூலம் இணைகின்றன. **நோக்கங்கள்:** இந்த உலகளாவிய நிகழ்வு அமைதி, இதயங்களின் மனமாற்றம் மற்றும் அன்னை மரியாளின் தாய்மைப் பாதுகாப்பைத் தேடுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

எம் அன்பு ஆன்மீகத் தாய் அன்னை மரியாளின் மாசற்ற இதயத்தின் சிறப்புகள் சொல்லில் அடங்கா. ''புனித அன்னாளின் திரு உதரத்திலே உருவாகும் முன்னரே, திரு இருதய நாதராம் இயேசு பாலனை பெற்றெடுக்கத் தேவையான மாசு மறுவற்ற ஓர் தகுதியான இதயத்தை அன்னை மரியாள் மூலம் இறைவன் சித்தம் கொண்டார். திரு இருதயத்தை பெற்றெடுக்க தகுதியான மாசற்ற இதயத் தாய்மைக்கான இந்த இறை அழைப்பை இறைவன், வானதூதர் கபிரியேல் மூலம் தெளிவாக எடுத்துரைத்தார். மாசற்ற இருதயமுடைய பெண்ணாக அன்னையை படைத்திருப்பினும், அவளது சுதந்திரத்தை இறைவன் மதித்து, அவளுடை முழு சம்மதத்தையும் வினவுகின்றார். இந்த அழைப்பை கபிரியேலிடம் தீர வசாரித்தறிந்துகொண்ட பின், தனது தாய்மையையும் கன்னிமையையும் இறைவன் எவ்வாறு ஒன்றிணைக்கப்போகிறார் என்ற அவளது கேள்விக்கு விடையாக பரிசுத்த ஆவியாரின் பிரசன்னம் இருந்த காரணத்தால், இறைவனால் ஆகாதது ஒன்றும் இல்லை என்ற ஆழமான விசுவாசத்தினால், ''இதோ உமது அடிமை, உமது விருப்பத்தின் படியே ஆகட்டும் என்று சம்மதம் தெரிவித்தார். அன்னை மரியாளின் இறை மீட்புத்திட்டத்திற்கான முழு சம்மதமும், அவளது அறுதியும் இறுதியுமான அசைக்கமுடியாத தீர்மானத்தினை அடிப்படையாக கொணடதை, எத்தனை சோகங்கள், சவால்கள் வந்திடினும், அவள் எவ்வித சலனமும் இல்லாது வாழ்ந்ததில் தெட்ட தெளிவாக தெரிகின்றது.

மகனே மகளே! அன்னையைப்போல் எமக்கும் மாசற்ற இதயம் இருந்தால், நாம் தெளிவான தீர்மானங்களை எடுப்பதோடு மட்டுமல்லாது, அவைகளில் சலனம் இன்றி உறுதியாக இருப்போம். எம் அன்னையின் மாசற்ற இதயம், அவளது அழைப்பிலே எண்பிக்கப்பட்டது. இறைவனுக்கான ஒரு பெண்ணின் தாய்மைக்கான அழைப்பில் எத்தனை சவால்கள். அன்னையின் மாசற்ற இதயம் களங்கப்பட்டதா? இல்லை. ஆனால் இன்று கணவன் மனைவி பிள்ளைகள், தாய் தகப்பன், மற்றும் உறவுகளிலே எத்தனை விரிசல்கள், களங்கங்கள்? எங்களின் இதயங்கள் வன்மங்களாலும், வன்முறைகளாலும் நிறைந்திருக்கின்றன. அன்னயின் பிள்ளைகள் எமது இதயங்கள் மாசு பிடித்து மங்கிப்போய் இருக்கின்றன. அன்னையின் மாசற்ற இதயம் களங்கத்திற்குள்ளாகாமல் இருக்க, எத்தனை தியாகங்கள், எவ்வளவு பொறுமை, இறை நம்பிக்கை, விசுவாசம் அவள் கொண்டிருந்தாள். இந்த பண்புகள் எம்மிடம் இருக்கின்றனவா? இந்த ஆண்டு மாசற்ற இதய அன்னையின் பெருவிழாவிலே ஒரு மாபெரும் உலகளாவிய ஜெப முன்னெடுப்பை செய்ய முழு உலகமே திரண்டு நிற்கின்றது என்றால், அவளது மாசற்ற இதயத்தின் பெறுமதியை நாங்கள் சீர்துக்கி பார்த்து, அன்னையின் பிள்ளைகள் நாம், அன்னயின் மாசற்ற இதயத்திற்கு நம்மை அர்ப்பணித்து, மாசற்ற இதயங்களைத் தாங்கிய மக்களாக வாழுவோம். குடும்பங்களில், உறவுகளில், உலகினில் ஒற்றுமை சமாதானம் அன்பு பெருக அன்னையிடம் மன்றாடுவோம்.

சகோ. அனுசியா

# கிறிஸ்துவின் திருவுடல் திருவிழா (Feast Of Corpus Christi)

திவ்விய நற்கருணையில் இயேசு கிறிஸ்துவின் மெய்யான பிரசன்னத்தைக் கொண்டாடும் ஒரு மகிழ்ச்சிமிக்க பெருவிழாவே திருவுடல் திருநாள் ஆகும். அருட்சாதனம் நிறுவப்பட்டதன் புனிதமான நினைவு நாள் ஆகும். மேலும், இது திவ்விய நற்கருணையை நிறுவியதன் மூலம் திருச்சபைக்கு அதன் மாபெரும் பொக்கிஷத்தை வழங்கிய கிறிஸ்துவுக்கு, திருச்சபை செலுத்தும் அதிகாரப்பூர்வமான மரியாதை மற்றும் நன்றியறிதலின் செயலாகும். இது பாரம்பரியமாக பரமதிரித்துவ பெருவிழா ஞாயிறுக்குப் பின்வரும் வியாழக்கிழமையில் (ஈஸ்டருக்கு 60 நாட்களுக்குப் பிறகு) அனுசரிக்கப்படுகிறது, இருப்பினும் பல மறைமாவட்டங்களில் இதை வியாழனுக்குப்பிறகு வரும் அடுத்த ஞாயிற்றுக்கிழமையில் கொண்டாடுகின்றனர்.

நற்கருணை: திருப்பலியின் போது புனிதப்படுத்தப்படும் அப்பமும் திராட்சை இரசமும் கிறிஸ்துவின் உண்மையான உடலாகவும் இரத்தமாகவும் மாறுகின்றன என்ற நம்பிக்கையை இந்தத் திருவிழா போற்றுகிறது. இந்த விழா 13 ஆம் நூற்றாண்டில், நற்கருணைக்கு ஒரு திருவிழா எடுக்க வேண்டும் என்னுத் ஆண்டவர் இயேசுவிடம் பெல்ஜியத்தின் லீஜின் நகர புனித ஜூலியானா பெற்ற தரிசனங்களின் பின், 1264 ஆம் ஆண்டில் திருத்தந்தை நான்காம் ஏர்பனால் உலகளாவிய திருவிழாவாக இது பிரகடனப்படுத்தபட்டது. கத்தோலிக்கர்கள் பெரும்பான்மையாக உள்ள பல நாடுகளில், இது ஒரு தேசிய பொது விடுமுறை நாளாகவும் அனுஷ்ரிக்கப்படுகின்றது, (பிரேசில், கொலம்பியா, போலந்து, போர்த்துக்கல் மற்றும் ஸ்பெயின்).



நற்கருணை என்பது, ஒரு பணி, ஒரு தினசரித் தீர்மானம். அது கிறிஸ்துவின் வாழ்வியல்; ஆண்டவர் அப்பத்தை எடுத்துப் பிட்கும் கணத்தில் எம்மாவுஸ் சீடர்கள் அவரை அடையாளம் கண்டுகொள்ளும் அளவிற்கு அது அவருடைய வாழ்வின் வழிமுறையாகும்: அவர்களுடைய கண்கள் திறக்கப்படுகின்றன, மேலும் இந்தச் செய்கையிலிருந்து அவர்கள் அவரிடத்திற்கும், அவருடைய அடையாளத்திற்கும் திரும்புகிறார்கள் (லூக்கா 24:31, 35: “அப்பொழுது அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு, அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள்… அப்பத்தைப் பிட்குதலிலே அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள்”).

கிறிஸ்துவின் திருவுடல் பெருவிழா ஆன்மீகம் என்பது, நற்கருணையில் இயேசு நமது மனிதத்தன்மையை தனக்கே வைத்துக் கொள்ளாமல், மீண்டும் மீண்டும் அதைப் பிட்டு, அனைவரும் இந்த அளிக்கப்பட்ட வாழ்வால் நிரப்பப்பட வேண்டும் என்பதற்காக அதைப் பகிர்ந்தளிக்கிறார்.

நற்கருணையின் சிறப்புப்பண்புகள் ஆவன: புதிய உடன்படிக்கையும், இந்த புதிய உடன்படிக்கையில் அனைவரையும் அசையாமல் நிற்கவும், வசதியாக அமர்ந்துகொள்ளவும், தங்கியிருக்கவும் அழைக்கிறார் (“அவர்கள் சுமார் ஐம்பது பேர் கொண்ட குழுக்களாக உட்காரட்டும்” - லூக்கா 9:14).

இயேசு அப்பங்களையும் மீன்களையும் எடுத்து, ஆசீர்வதிப்பதற்காக மேலே பார்க்கிறார், பின்னர் அப்பத்தைப் பிட்டு சீடர்களுக்குக் கொடுக்கிறார், (லூக்கா 22:19). சாதாரண கோதுமை அப்பம் வெறுமனே உடைத்துக் கொடுத்தால் விரைவில் தீர்ந்துவிடும், பசி அதிகரிக்கும், மக்கள் உணவிற்காக வேறு வழியைத் தேட வேண்டியிருக்கும்.

எனவே சதாரண கோதுமை அப்பம் முதலில் ஆசீர்வதிக்கப்படும் பொழுது, அது இயேசுவின் திருஉடலாக மாறுகின்றது. பின்னர் உடைக்கப்பட்டு கொடுக்கப்படும் பொழுது அது இயேசுவின் இரத்தத்தினால் ஆன புதிய உடன்படிக்கையின் தீர்ந்துபோகாத உணவாகின்றது. பின் மீதமும் ஏராளமாக இருக்கும். (“அவர்கள

· எல்லாரும் வயிறாரச் சாப்பிட்டு, மீதியானதையும் பன்னிரண்டு கூடைகள் எடுத்துக்கொண்டார்கள்" - லூக்கா 9:17), **ஏனெனில் அன்பு அப்படித்தான்; அது தீர்ந்துபோகாத, எல்லாவற்றையும் கடந்த, தொடர்ந்து நிலைத்திருக்கும் ஒன்று.**

எனவே இதனை என் நினைவாகச்செய்யுங்கள் என்று இயேசு சீடர்களுக்கு தமது அதிகாரத்தை வழங்கியதன் மூலம், சாதாரண கோதுமை அப்பம் எடுக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டு, உடைக்கப்பட்டு கொடுக்கப்படும் போது, இயேசுவின் திரு உடலாக செழிப்பாகத் திரும்புகிறது, பெருகுகிறது.

மேலும் அது, கொடுத்தவரின் கைகளுக்கு நூறு மடங்காகத் திரும்புகிறது; அவரிடமிருந்து அதைப் பறிக்க முடியாது, அது நிலையான வாழ்விற்காக நிலைத்திருக்கும்.

அருட் பணி. குருதீபன் அ.ம.தி

## இயேசுவின் திரு இருதய அன்னை

புனித அன்னை மரியாள் ஊடாக புனித அன்னைத் திருச்சபை செய்யும் வேண்டுதல்கள் பலவும் அழகானவை ஆகும். ஆயினும், இவை ஒவ்வொன்றும் இறைவனின் அன்புடன் அவளுக்குள்ள உறவைத் தெளிவாக கோடிட்டுக் காட்டுகின்றன. மரியன்னையின் வாழ்வு அன்பின் ஒரு சிறப்பு வெளிப்பாட்டைத் தவிர வேறென்ன? மேலும், நமக்காக இறைவனிடம் பரிந்துரைக்கும் அன்னையின் சக்தி என்பது, நம்மீதுள்ள இறைவனின் சிறப்பு அன்பின் ஒரு உன்னதமான அம்சத்தைத் தவிர வேறென்ன?

ஆகவே, அவளை ஸ்பெகுலம் ஜஸ்டிஷியே (Speculum Justitiae), அதாவது நீதியின் கண்ணாடி என்று அழைப்பது முற்றிலும் பொருத்தமானது; மறுபுறம் சர்வவல்லமையுள்ள பரிந்துரையாளர் என்றும், அவள் அழைக்கப்படுகிறாள். அவள் நீதியின் கண்ணாடி, ஏனெனில் இறைவன் அவள் மீது மிகுந்த அன்பு கொண்டதால், ஒரு மனிதப் படைப்பிற்கு சாத்தியமான அனைத்து பரிணாமங்களையும் அவளுக்குள் குவித்தார். வேறு எந்தப் படைப்பிலும் அவளைப் போல இறைவன் இவ்வளவு சிறப்பாகப் பிரதிபலிக்கவில்லை.

இவ்வாறு, அவள் இறைவனின் நீதியை முழுமையாகப் பிரதிபலிக்கிறாள். அவள் சர்வவல்லமையுள்ள பரிந்துரைப்பவள், ஏனெனில் தேவ அன்னையின்றி எந்த அருளும் கிடைப்பதில்லை, மேலும் அவள் நமக்காகப் பெற்றுத்தர முடியாத அருள் எதுவும் இல்லை.

இவ்வாறு, திரு இருதயத்தின் தேவ அன்னையாகிய மரியாளை நாம் மன்றாடும்போது, மற்ற எல்லா மன்றாட்டுகளின் ஓர் அழகான தொகுப்பை உருவாக்குகிறோம்; தெய்வீகத் தாய்மையின் தூய்மையான பிரதிபலிப்பை நாம் நினைவுகூர்கிறோம்; அதே நேரத்தில், அவளுடைய மன்றாட்டை ஜெபிக்கும் போதும் அல்லது அருள் நிறைந்த மரியே வாழ்க என்னும் பாடலைப் (சால்வே ரெஜினா) பாடும்போதும், இவைகள் அன்னையின் தெய்வீக அன்பின் நாதங்கள் தான் என்பதையும் சுவைக்கக்கூடியதாகவுள்ளது.

அன்னை மரியாள் மூலமாக நாம் ஜெபிக்கும் மற்றுமொரு வேண்டுதலான "பாவிகளின் பரிந்துரையாளர்" என்பதை உற்றுநோக்கும் போது, திரு இருதய அன்னை, பாவிகளின் பரிந்துரையாளர், தெய்வீக நீதியின் முன் சர்வவல்லமையுள்ள ஒரு பரிந்துரையாளர். எனவே அவருடைய இரக்கத்திற்கான மன்றாட்டுகள் மறுக்கப்படாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வாறாயின், திரு இருதய அன்னை விண்ணகத்தில் நமக்கு இருக்கிற நமது பரிந்துரையாளர், எல்லையற்ற இரக்கத்தின் பொக்கிஷத்திற்கான பொன் திறவுகோலைக் கொண்டிருக்கும் ஒரு சர்வவல்லமையுள்ள பரிந்துரையாளர் என்று சொல்வதே சாலச்சிறந்ததாகும். சகோ. மரீனா



# கிறிஸ்துவை மையமாகக் கொண்டு உயிருள்ள திருஅவையாக வாழ திருத்தந்தை அழைப்பு!

ஜூன் 20, 2026

திருத்தந்தை பதினான்காம் லியோ, வடக்கு இத்தாலியப் பகுதியான லோம்பார்டியில் உள்ள இரண்டு நகரங்களுக்கு ஒரு குறுகிய ஆயர் பயணத்தைத் தொடங்கினார்.


பாவியா மற்றும் சான்ட் ஏஞ்சலோ லோடிஜியானோவுக்கான திருத்தந்தையின் இந்தப் பயணம், ஏறக்குறைய மூன்றரை மணி நேர ஹெலிகாப்டர் பயணம் உட்பட, எட்டு மணி நேரத்திற்கும் சற்று அதிகமாக நீடித்தது.

பாவியாவிற்கு வந்தடைந்த பிறகு, திருத்தந்தை லியோ புற்றுநோய் சிகிச்சைப் பெற்றுவரும் குழந்தைகளைச் சந்தித்தார். பின்னர் அவர் சான் பியட்ரோ இன் சியேல் டி"ஓரோ பேராலயத்திற்கு வாகனத்தில் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு,

ஜூன் 17, 2026

தாம் தெரிவித்த கருத்துக்களை எதிரொலிக்கும் வகையில், ஈரான் மற்றும் அமெரிக்காவிற்கு இடையேயான இஸ்லாமாபாத் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வரவேற்பதாக திருத்தந்தை பதினான்காம் லியோ இன்று காலை தெரிவித்தார்.

"பொறுமையான உரையாடல் மற்றும் பேச்சுவார்த்தையின் ஊக்கமளிக்கும் விளைவாக, வெள்ளிக்கிழமை கையெழுத்திடப்படவுள்ள ஈரான் இஸ்லாமியக் குடியரசுக்கும் அமெரிக்காவிற்கும் இடையேயான இந்த ஒப்பந்தத்தை நான் திருப்தியுடன் வரவேற்கிறேன்," என்று திருத்தந்தை லியோ, புனித பேட்டர் சதுக்கத்தில் தனது பொது சந்திப்பிற்காக யாத்ரீகர்களிடம் கூறினார்.



பேசாலை வளர்கலை மன்றத்தின் பொன்விழா நினைவாக பிரமாண்ட நுழைவாயில் திறப்பு



கிளிநொச்சியில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்ற சமகால அரசியலும் போராளிகளின் வகிபாகமும் மாநாடு: அருட்தந்தை எம். எக்ஸ். கருணாரட்ணம் அவர்களுக்கு வரலாற்றின் வேர்கள் விருது வழங்கி கௌரவம்!





புதுப்பொலிவுடன் காட்சியளிக்கும் உடையார்கட்டு புனித அந்தோனியார் ஆலயம்: ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களால் ஆனி 14 கோலாகலமாகத் திறந்து வைப்பு!

## திருத்தந்தை 14ம் லியோ திருஅவை புதுப்பித்தலுக்கான அழைப்பு!

கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை குறைவதாக தோன்றுவதையோ அல்லது சமூக மாற்றங்களையோ கண்டு மனம்தளராமல், இயேசுவின் பார்வையில் உலகைப் பார்ப்பதே திருஅவையின் முதல் கடமை என்று திருத்தந்தை வலியுறுத்தினார். வைவகாசி 28. 2026 அன்று இடம்பெற்ற இத்தாலிய ஆயர் பேரவையின் 82-வது பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய திருத்தந்தை, இத்தாலிய ஆயர்கள் தங்களின் நற்செய்திப் பணியை மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என்றும், திருஅவை வாழ்வின் மையமாக நற்செய்தியை நிலைநிறுத்த வேண்டும் என்றும் அவர்களைக் கேட்டுக்கொண்டார். விசுவாச வாழ்வின் தொடக்கப் பயிற்சி என்பது, திருவருட்சாதனங்களைப் பெறுவதற்கான வெறும் ஏற்பாடு மட்டுமல்ல; அது வாழ்நாள் முழுவதும் தொடரும் ஒரு பயணம் என்று எடுத்துக்காட்டிய திருத்தந்தை, மேலும், திருமுழுக்கு என்பது கிறிஸ்துவோடும் திருஅவையோடும் கொண்டுள்ள பிணைப்பில் உருவானது என்றும், அது நமது வாழ்வை உருமாற்றும் ஒரு வாழும் உண்மை என்பதை மக்கள் கண்டறிய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

பிரிவினைகள், தனிமை மற்றும் நம்பிக்கையை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பதில் உள்ள சிரமங்கள் என இன்றைய உலகம் எதிர்கொள்ளும் சவால்களை மேற்கோள்காட்டி திருத்தந்தை, இயேசு கிறிஸ்து உலகை ஒரு பிரச்சினையாகப் பார்க்கவில்லை; மாறாக, இறைவனின் வயலில் வேலை செய்ய வேலைளாட்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒரு மாபெரும் அறுவடைக்கான வயல் நிலமாகவே பார்க்கிறார் என்று ஆயர்களுக்கு கூறினார்.

ஜெபம்: இறைவார்த்தை, நற்கருணை ஆகியவற்றோடு ஏழைகள், குடும்பங்கள் மற்றும் இளைஞர்களை அன்போடு அரவணைக்கும் சமூகங்களில்தான் நம்பிக்கை வளரும் என்று மொழிந்த திருத்தந்தை,திருஅவை எப்போதும் தன்னை புதுப்பித்துக் கொள்ளவும், நற்செய்திப் பணியில் ஆர்வமாக இருக்கவும் ஆயர்கள் ஆழமாகச் செவிமடுக்க வேண்டும் என்றும் அவர்களைக் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து இறைவனின் வார்த்தைக்கும், இறைமக்களின் குரலுக்கும், காலத்தின் மாற்றங்களுக்கும் ஆயர்கள் தங்களின் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்திய திருத்தந்தை, இத்தாலிய திருஅவையின் ஒன்றியப்பயணப் பாதையில் அனைவரும் பங்கேற்பதும் ஒருவரோடு ஒருவர் இணைந்திருப்பதுமே ஒரு கூட்டுப்பயணத் திருஅவையின் அத்தியாவசியமான கூறுகள் என்று கூறினார்.

இறுதியாக, முக்கியமானவற்றில் கவனம் செலுத்தும் துணிச்சல் நமக்கு வேண்டும் என்று அழைப்பு விடுத்த திருத்தந்தை, பங்குகள் மற்றும் திருஅவை அமைப்புகள் தங்களை தக்கவைத்துக் கொள்வதில் மட்டுமே கவனம் செலுத்தாமல், நற்செய்திப் பணி ஆர்வத்தோடு கிறிஸ்துவை உலகிற்கு அறிவிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று ஆயர்களுக்கு அழைப்பு விடுத்து தனது உரையை நிறைவு செய்து வைத்தார்.






# புனிதர்களான பேதுரு மற்றும் பவுல், அப்போஸ்தலர்கள், பெருவிழா

புனித பேதுருவும் புனித பவுலும் ஆரம்பகாலத் திருச்சபையின் விசுவாசத்தைப் பலப்படுத்தி, அதை ஒற்றுமையில் காத்த திருச்சபையின் பெரும் தூண்கள், இரண்டு சிறந்த அப்போஸ்தலர்கள் ஆவர்.

ஆனால் இந்த இரண்டு புனிதர்களும் இரவும் பகலும் போல முற்றிலும் மாறுபட்டவர்களாக இருந்தனர், மேலும் அவர்களின் வேறுபாடுகள் கலாத்தியர் 2:14-இல் கூடப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கிறிஸ்துவின் அடையாளத்தை உறுதிப்படுத்தியவர் புனித பேதுருவாக இருந்தபோதிலும், அவருடைய குணமும் செயல்களும், பாறை என்று பொருள்படுகின்ற அவருடைய பெயரின் அர்த்தத்தை மனமாற்றத்தின் பின் தான் முழுமையாகப் பிரதிபலித்தது. பேதுரு அவசரக்காரராகவும் உணர்ச்சிவசப்படுபவராகவும் இருந்தார், மேலும் அவர் இயேசுவை மும்முறை மறுதலித்ததை நாம் நிச்சயமாக நினைவுகூரலாம்.

புனித பவுல், மனமாற்றத்திற்கு முன்பு கிறிஸ்தவர்களின் கொடூரமான எதிரியாக இருந்தார், மேலும் அவர் ஒரு உக்கிரமான குணத்தைக் கொண்டிருந்தார். ஆனால், தகுதியற்றவர்களான இந்த இரு மனிதர்களைத் தமது திருச்சபையின் தலைவர்களாக இயேசு தேர்ந்தெடுத்தது நமக்கு வியப்பாக இருக்கலாம்.

ஆயினும், திருச்சபையின் பின்னணியில் இருந்த ஆன்மீக மற்றும் வழிகாட்டும் சக்தி யார் என்பதை அது காட்டியது. ஆனால், அவர்களின் வேறுபாடுகளையும் குறைகளையும் மீறி, புனிதர்களான பேதுருவும் பவுலும் ஒரு பொதுவான இலக்கிலும் பணியிலும் ஒன்றுபட்டிருந்தனர். இருவரும் வேதசாட்சிகளாக மரித்தனர்; இது, அவர்களுடைய வாழ்வின் நோக்கம் தங்களின் சொந்த மகிமைக்காக அல்ல, மாறாக இறைவனின் மகிமைக்காகவே என்பதைக் காட்டுகிறது. புனிதர்களான பேதுரு மற்றும் பவுலின் இந்தத் திருவிழா, ஆளுமைகளிலும் குணநலன்களிலும் உள்ள வேறுபாடுகளையும் தோல்விகளையும் மீறி, திருச்சபையானது ஒரு பொதுவான இலக்கிற்காகவும் பணிக்காகவும் ஒன்றுபட முடியும் என்பதை நமக்குக் காட்டுகிறது.

புனிதர்களான பேதுரு மற்றும் பவுலின் வாழ்க்கை, பலவீனமான மற்றும் குறைபாடுள்ள மனிதர்களைத் தமது திருச்சபையின் தலைவர்களாக இறைவன் தேர்ந்தெடுத்து அவர்களை பலமுள்ளவர்களாகவும், தகுதியுள்ளவர்களாகவும், ஏன் தனது திருஅவையின் கலங்கரை விளக்காகவும் மாற்றியமைக்க முடியும் என்பதை இந்த உலகிற்கு எண்பிக்கிறார். குறைபாடுள்ள இந்த மனிதக் கருவிகளை இறைவன் தேர்ந்தெடுப்பதன் மூலம், இறைவன் இந்த உலகிற்கு கூற வரும் மாபெரும் உண்மை என்னவெனில், மனிதனால் முடியாதது இறைவனால் முடியும் என்பதே.

திரு. அன்ரனி ஒகஸ்ரின்



# புனித அந்தோனியார் திருவிழா

புனித அந்தோணியார் போர்த்துகலின் லிஸ்பன் நகரில் பிறந்தார். அவர் ஒரு குருவும், பிரான்சிஸ்கன் துறவியும் ஆவார். இவர் போர்த்துகல் மற்றும் இத்தாலி முழுவதும் நற்செய்தியைப் போதித்தார். ஒரு இறையியலாளராகவும், அவருடைய மறையுரை, கடவுள் மற்றும் ஆன்மாக்கள் மீதான அன்பினால் உத்வேகம் பெற்றதுடன், மனதை மாற்றும் ஒரு அசாதாரண சக்தியையும் கொண்டிருந்தது; அது விவிலியத்தின் ஊடுருவும் சக்தியால் நிரம்பியிருந்தது. அவர் மறையுரை செய்வதைக் கேட்ட திருத்தந்தை ஒன்பதாம் கிரகோரி, அவர் வாழ்ந்த காலத்தில் அவரை அர்கா டெஸ்டமெண்டி Arca Testamenti, ("the living repository of the Holy Spriptures") என்று அழைத்தார். அதாவது, பரிசுத்த ஆவியின் உயிருள்ள களஞ்சியம் என்பதாகும்.

மேலும், திருத்தந்தை பன்னிரண்டாம் பயஸ், அவரைத் திருச்சபையின் அறிஞர் என்று பிரகடனப்படுத்தியபோது, அவர் கூறிய அனைத்தையும் நற்செய்திகளின் நூல்களின் அடிப்படையில் அமைத்ததாகவும், அவரை நற்செய்தி அறிஞர் என்று தகுதியுடன் அழைக்கலாம் என்றும் அறிவித்தார். புனித அந்தோணியார் சிறிது காலம் பிரான்சிலும், முக்கியமாக இத்தாலியிலும் வாழ்ந்து, 1231-ஆம் ஆண்டில் தனது 36-வது வயதில், பெரும் புனிதத்தன்மை கொண்டவர் என்ற நற்பெயருடன் பதுவாவில் காலமானார். அவர் இறந்த நாள் முதல் நிகழ்ந்த எண்ணற்ற அற்புதங்கள், விசுவாசிகளை அவரை அயராத கருணையுள்ள புதுமையாளர் போற்றச் செய்தன.

அந்தோனி திருச்சபையின் மிகவும் பிரபல்யமான புனிதர்களில் ஒருவர். அவர் தொலைந்த பொருட்களுக்கும் மற்றும் எண்ணற்ற பிற நற்காரியங்களுக்கும் பாதுகாவலராக இருக்கிறார். பிரேசிலில், அவர் இராணுவத்தின் தளபதியாகக் கருதப்படுகிறார்; அவர் ஏழைகளின் பாதுகாவலர் மற்றும் அவர் இறந்த கணத்திலிருந்தே அற்புதங்களைச் செய்பவராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

ஒருமுறை போர்லியில் நடந்த ஒரு திருநிலைப்படுத்தல் நிகழ்விற்கு அழைக்கப்பட்ட மறையுரையாளர் வராதபோது, புனித அந்தோனியார் மறையுரை ஆற்ற அழைக்கப்பட்டார். அன்றைய மறையுரையில் வெளிப்பட்ட அவரது சொல்லாற்றல் அனைவரையும் கவர்ந்தது, மேலும் அவர் வடக்கு இத்தாலி முழுவதும் மறையுரை செய்ய நியமிக்கப்பட்டார். கத்தோலிக்க திருஅவைக்கு எதிரானவர்களின் மேல் அவர் பெற்ற வெற்றியின் காரணமாக, அவர் மதத்திற்கெதிரானவர்களின் சுத்தியல் என்று அழைக்கப்பட்டார். மேலும், அவரது ஆழ்ந்த அறிவின் காரணமாக, புனித பிரான்சிஸ் அவர்களே அவரை இறையியல் ஆசிரியராக நியமித்தார். பதுவாவின் புனித அந்தோணியார் மிகவும் ஆற்றல்மிக்க மறையுரையாளராக இருந்ததால், அவர் நகரத்திற்கு வரும்போது மக்கள் கடைகளை மூடி அவருக்கு மரியாதை செய்தனர். மக்கள் அவரது மறையுரைகளை கேட்பதற்காக இரவு முழுவதும் தேவாலயத்தில் தங்கியிருந்தனர்.

அவர் இறந்த ஓராண்டுக்குள் புனிதராக அறிவிக்கப்பட்டார், மேலும் 1946-ஆம் ஆண்டில் திருத்தந்தை பன்னிரண்டாம் பயஸ் அவர்களால் திருச்சபையின் அறிஞர் என அறிவிக்கப்பட்டார்.

புனித பதுவை அந்தோனியாரின் நிஜ பெயர் பர்னாந்து (Fernando) ஆகும். துறவற வாழ்வில் இணைந்த பின், புனித வனத்து அந்தோனியாரது பெயரை தனது பெயராக தேர்ந்தெடுத்தார். கத்தோலிக்க திருமறையில், துறவற வாழ்வில் இணைந்து, தமது முதல் அர்ப்பணத்தை மேற்கொள்ளும் போது, அந்த துறவி தன்னுடைய வரழ்வினுக்கு பெரும் மாதிரியாக இருக்கும் ஒரு புனிதருடைய பெயரை தனது பெயராக தேர்ந்தெடுக்க வேண்டும். அவ்வகையில், துறவற வாழ்வின் தந்தை என்று அழைக்கப்படும் புனித வனத்து அந்தோனியாரது வாழ்வு முறையால் வெகுவாக ஈர்க்கப்பட்ட இவர், வனத்து அந்தோனியாரின் பெயரை தனது பெயராக தாங்கி, வனத்து அந்தோனியார் போலவே, சிறப்பான மறையுரையாளர் என்றும், வாழும் போதே புதுமை செய்த வல்லமை நிறைந்த புனிதர் என்றும் அடையாளம் பெற்றார். இன்று இலங்கையிலும் சரி, இன்னும் பல இடங்களிலும் சரி, வனத்து அந்தோனியாரின் ஆலயங்கள் பல பதுவை அந்தோனியாரின் ஆலயங்களாக மாறிய வரலாற்று உண்மைகள் குறித்த "அந்தோனியார் யார்" என்னும் சிறப்புக் கட்டுரையை, ஆவணி மாத அன்பு மக்களே சஞ்சிகையில் எதிர்பாருங்கள். (உதாரணம்: கச்சைதீவு, கக்கடதீவு, மற்றும், பாலைதீவு அந்தோனியார் தேவாலயங்கள்).

சகோ. பாபு மாலா முல்லைத்தீவு

# கனடா புலம் பேர் தமிழ் கத்தோலிக்க வரலாறு (பாகம்.01)




புனித அந்தோனியாரின் திருவிழா கத்தோலிக்கர்களால் ஜுன் 13 அன்று உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகிறது. இதில் பெருநகர் டொராண்டோ பகுதியில் (GTA), இந்த விழா பரவலாக பல கத்தோலிக்க தேவாலயங்களில் இன்று கொண்டாடப்படுகின்றது.. இந்தக் கொண்டாட்டங்கள் நிகழும் தேவாலயங்களில் ரொறொண்டோ ப்ளுார் தெரு மேற்கு புனித அந்தோனியார் பங்கு புனித அந்தோனியார் திருவிழாவுக்கான ஒரு மையமாக ஆரம்ப காலம் தொட்டே விளங்குகிறது. இது முழுக்க ஆங்கிலம் மற்றும் போர்த்துக்கல் மொழிப் பங்கு ஆலயமாகவே இருந்தது.

1975 காலப்பகுதியின் பின், இலங்கையிலிருந்து கனடாவிற்குள் வந்த புலம்பேர் கத்தோலிக்க மக்கள் இவ் அந்தோனிார் தேவாலயத்திற்கு தமது அந்தோனியார் நவநாட்களை மேற்கொள்ளவும் மற்றும் ஆங்கிலம் மற்றும் போர்த்துக்கீசிய மொழி திருப்பலிகளிலும பங்கெடுக்கவும் ஆரம்பித்தனர்.

இவ்வாறு 1975 காலப்பகுதியின் பின், இலங்கையிலிருந்து கனடாவிற்குள் பெருமளவில் வந்த புலம்பேர் கத்தோலிக்க மக்களுக்கான தமிழ் மொழி மூல திருப்பலிகளோ, திருவழிபாடுகளோ இருந்திருக்கவில்லை. காரணம் அங்கே தமிழ் குருக்கள் எவரும் இருந்திருக்கவில்லை.

அக்காலத்தில் ரொறொண்டோவில் இருந்த ஒரே ஒரு தமிழ் குருவானவர் என்றால், அது கிறிஸ்து அரசர் குருமடத்தில் மெய்யியல் பேராசிரியராக தனது கற்பித்தல் பணியை செய்து வந்த அருட் தந்தை கிறிஸ்ரி யோக்கீம் அ.ம.தி அடிகளார் மாத்திரமே. தமிழ் மக்களின் அதிகரித்த வருகையும், அவர்கள் ஆயன் இல்லா ஆடுகள் போல் அலைந்ததையும், அவர்களது விசுவாச வாஞ்சையையும் உற்றுநோக்கிய தந்தை கிறிஸ்ரி யோக்கீம் அ.ம.தி அடிகளார், படிப்பித்தல் மற்றும் பல பணிப்பழுக்களுக்கும் மத்தியிலும் தமிழ் மக்களது ஏகபோக ஆன்மீக குருவாகவும் பணிபுரிய தாமாகவே தன்னை அர்ப்பணித்தார்.

தாயின் கருவில் உருவாகும் முன்னரே பெயர் சொல்லி தனது பணிக்கென இறைவன் பணியாட்களை அழைப்பது போல, தமிழர் தாயகத்திலிருந்து தமிழ் மக்கள் புலம்பேர்ந்து கனடாவிற்குள் அதிகமாக வருவார்கள் என்றும், அவர்களுடைய ஆன்மீக தேவைகளை நிறைவேற்ற பணியாட்கள் தேவை என்றும் முன்கூட்டியே உணர்ந்த இறைவன், திருவுள சபையைச் சேர்ந்த அருட் தந்தை பற்றிக் ஞானப்பிரகாசம் மற்றும் புளோரன்ஸ் இராயரெட்னம் போன்றவர்களை, 1980 களில் புலம்பேர் தமிழர்களின் வருகையின் முன்னரே, 1960 களில் இலங்கைளிலிருந்து கனடாவின் கியூபேக் மாநிலத்திற்கு அழைத்து, குருமடத்தில் குருத்துவ படிப்புக்களை பூரத்திசெய்யவித்து, 1975 இல் இவர்களை குருக்களாக இறைவன் அபிஷேகம் செய்து, மீண்டும் இலங்கைக்கு அனுப்பிவைத்தார்.

2271391754

பின்னர், புலம்பேர் தமிழ் கத்தோலிக்க மக்களின் அதிகரித்த வருகையோடு, அவர்களது ஆன்மீக குருவாக கடமையாற்ற 1980 களில் அருட் தந்தை பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளார் கனடாவிற்கு வரவளைக்கப்பட்டு, மொன்றியல் புலம்பேர் கத்தோலிக்க தமிழ் மக்களுக்களுக்கான ஆன்மீக குருவாக பணியாற்றினார்.

அக்காலத்தில், இலங்கையிலிருந்து கனடாவிற்குள் புலம்பேர்ந்து வந்த மக்கள் மொன்றியல் மாநகரில் செறிவாக இருந்த காரனத்தினால், அருட் தந்தை பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளார் மொன்றியலில் பணிக்கமர்த்தப்பட்டார். அருட்தந்தை கிறிஸ்ரி யோக்கிம்பிள்ளைக்கு அடுத்ததாக, புலம்பேர் கத்தோலிக்க மக்களது ஆன்மீகப் பணிக்கென ரொறொண்டோ மறைமாவட்டத்தில் காலடியெடுத்துவைத்த முதலாவது தமிழ் குரு இவர் ஆவார்.

பின்னர், மொன்றியலில் இருந்தும், இலங்கையிலிருந்தும் தமிழ் மக்கள் ரொறொண்டோ நகரில் செறிவாக குடியேற ஆரம்பித்த காரணத்தினால், மொன்றியலில் பணியாற்றிக்கொண்டிருந்த அருட் தந்தை பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளார் ரொறொண்டோ நகருக்கு இடமாற்றம் செய்யப்பட்டு, இவரது இடத்திற்கு அருட் தந்தை புளோரன்ஸ் இராஜரெட்னம் மொன்றியல் நகர பணிக்கென இலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்டு, பணிக்கமர்த்தப்பட்டார்.

இன்று கனடாவின் பல பங்குகளில் தமிழ் மொழி திருப்பலிகளும் வழிபாடுகளும் சிறப்பான முறையில் நிகழக்காரணம், 1980 களின் பின்னர், புலம்பேர் கத்தோலிக்க மக்களின் அதிகரித்த வருகையின் நிமித்தம், அவர்களின் வேண்டுகோட்களுக்கிணங்க எமது தமிழர் தாயக தமிழ் குருக்களது வருகையும், யாழ்மறைமாவட்ட குருக்களின் வருகையும் இந்த தேவாலயங்களுக்கான நிர்வாக பொறுப்புக்களும் புலம்பேர் மக்களினால் பெற்றுக்கொடுக்கப்பட்டது. இதில் முக்கிய பங்கு வகித்தவரகளில் அருட் தந்தை கிறிஸ்ரி யோக்கிம்பிளளை அ.ம.தி பங்கு வகித்தனர்.

இதன் காரணமாகவே இன்று பின்வரும் தேவாலங்களிலும் தமிழ் திருப்பலிகள், தமிழ் வழிபாடுகள், விழாக்கள், குறிப்பாக புனித அந்தோனியார் விழா தமிழ் திருப்பலியும் நடைபெற ஆரம்பித்தன: டொராண்டோ ஷெர்போர்ன் தெரு லூர்து அன்னை தேவாலயம், புனித வில்பிரட் தேவாலயம், மிசிசாகா புனித பத்திமா மாதா ஆன்மீக மணியக தேவாலங்களிலும் அருள் மதா தேவாலயம், திரு இருதய நாதர் தேவாலயங்களிலும மற்றும் மொன்றியல் மீடபு அன்னை பங்கு தேவாலயத்தலும், புனித ஒகஸ்ரின் தேவாலயத்திலும், டுகாம் பிரதேசத்திலும் புலம்பேர் தமிழ் மக்களால் புனித அந்தோனியாரின் திருவழா தமிழிலும் சிறப்பான முறையிலே கொண்டாடப்படுகின்றன.

2026 ம் ஆண்டின் புனித அந்தோனியாரின் நவநாட்கள், திருவிழா திருப்பலிகள், வழிபாடுகள் ரொறொண்டோவின் பல ஆலயங்களில் தமிழ் மொழியல் சிறப்பாக நடைபெறுவதை பார்த்து பூரிப்படைந்தோம். மிசிசாக்கா, மேரிலேக், மற்றும் கிங்சிற்றியில் அருட் தந்தை ஜோண் அருள்தாஸ் தலைமையிலும், மற்றும் புனித லூர்து மாதா தேவாலயத்தில் இயேசு சபை குருக்களால் அருட் தந்தை யூபீன் தலைமையிலும், மற்றும் ஸ்காபுரோ புனித ஆரோக்கிய மாதா தமிழ் பங்கில் அருட் தந்தை சாள்ஸ் கொலின்ஸ் தலைமையில் அனைத்து தமிழ் குருக்களும் ஒருமித்து ஒன்றாக புனித அந்தோனியார் திருநாள் திருப்பலியை தமிழில் ஒப்புக்கொடுத்தோடு, திருப்பலியின் இறுதியல் அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார் கடந்த எட்டு வருடங்களாக புனித ஆரோக்கிய அன்னை பங்கிற்கு ஆற்றிய அளப்பரிய சேவையை நன்றியுடன் நினைத்து மதிப்பளிக்க, "மதிப்பளிப்பும் பாராட்டு விழாவும்" என்ற கருப்பொருளில் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில், திருமறைக்கலாமன்றத்தின் ஒருங்கிணைப்பாளராக இயங்கிக்கொண்டிருக்கும் திரு எலியாஸ் அவர்களால் சிறப்புரை ஆற்றப்பட்டு பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இன்னும் சிறப்பான விடயம் என்னவெனில், கோடி அற்புதர் புனித அந்தோனியாரின் புனித பண்டங்கள் பதுவை நகரிலிருந்து ரொறொண்டோ நகருக்கு கொண்டுவரப்படுகின்ற அளவிற்கு, ரொறொண்டோவில் அதிகர்த்த புலம்பேர் தமிழ் கத்தோலிக்க மக்களின் வருகையும், இவர்களால் எங்கும் வியாபித்திருக்கும் புனித அந்தோனியாரின் பக்தியுமே என்றால் அது மிகையாகாது.

ஆசிரியர் திரு டேவிட் தோமஸ்

## தமிழர் தாயக தந்தை

## எச்.எஸ். கயசிந்த் சிங்கராயர் தாவீது அடிகளார்



# தந்தையர் தின சிறப்புக் கட்டுரை

யாழ்ப்பாணப் பொது நூலக "தீ" ஏற்படுத்திய அருட்தந்தை தாவீது அடிகளாரின் மறைவு, தமிழ் தேசத்தின் ஒவ்வொரு தமிழ் குழந்தையும், அதன்பின் பிறந்த ஒவ்வொரு தலைமுறையினரும் அனுபவித்த இழப்பின் அடையாளம்

நாம் சர்வதேச தந்தையர் தினத்தை கொண்டாடுகிறோம். ஒரு மகவைப் பெற்றெடுப்பதால் மாத்திரமே ஒரு தந்தை தான் தந்தை என்ற தகுதியை பெற்று விட முடியாது. தனது மகவின் அறிவை பெற்றெடுப்பவன் தான் உண்மையான தந்தை. அந்த வகையில், தமிழ் குழந்தைகள் எமது அறிவை பெற்றெடுக்க முழுமூச்சாக நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்து, இரவு பகலாய் தமது பொன்னான நேரங்களையும் காலங்களையும் தமிழுக்காகவே செலவழித்த தமிழர் தந்தை தாவீது அடிகளாரை தமிழர் நாம் நினைவு கூறவில்லை என்றால், அது ஒரு வரலாற்றுப்பிழையாகும்.

1981-ஆம் ஆண்டு மே 31-ஆம் திகதி நள்ளிரவில், தமிழ் இலக்கியம் மற்றும் பாரம்பரியத்தின் உறைவிடமாக விளங்கிய யாழ்ப்பாணப் பொது நூலகம், இலங்கை பாதுகாப்புப் படைகள் மற்றும் அரசால் ஆதரிக்கப்பட்ட கும்பல்களால் தீக்கிரையாக்கப்பட்டதை நேரில் நின்று கண்ணால் பார்த்த சாட்சிகளில் நானும் ஒருவன். இந்தத் தீயெரிப்பு, அன்று முதல் ஈழத் தமிழர்களால் ஒரு இனப்படுகொலைச் செயலாகக் கருதப்படுகிறது.

பண்டைய திராவிடக் கட்டிடக்கலையால் ஈர்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட ஒரு பிரம்மாண்டமான கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்த, 95,000-க்கும் மேற்பட்ட தனித்துவமான மற்றும் ஈடு செய்ய முடியாத தமிழ் பனை ஓலைகள், கையெழுத்துப் பிரதிகள், தோல் சுருள்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் செய்தித்தாள்கள் ஆகியவை இந்தத் தீயெரிப்பின் போது அழிக்கப்பட்டன. யாழ்ப்பாண வைபவமலை (யாழ்ப்பாணத்தின் வரலாறு) போன்ற, நூலகத்தில் வைக்கப்பட்டிருந்த சில நூல்கள், உலகில் எஞ்சியிருந்த ஒரே பிரதிகளாக இருந்ததால், உண்மையில் ஈடு செய்ய முடியாதவையாக இருந்தன. அது ஆசியாவின் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றாகத் திகழ்ந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் கீழ், மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதும், அமைச்சரவை அமைச்சர்களான சிரில் மத்தேயூ மற்றும் காமினி திசாநாயக்க ஆகியோர் யாழ்ப்பாணத்தில் இருந்தபோதும் இந்த அழிப்பு நிகழ்ந்தது. நான் முதல் கொண்டு, அனைத்து இளைஞர்களும் தலைதெறிக்க எங்களது ஊர்களுக்கு முண்டியடித்து பேரூந்துகளில் ஏறி ஓடினோம். காரணம், இந்த நூல்நிலைய எரிப்பின் போது, அங்கே குவிக்கப்பட்டிருந்த பல்லாயிரக்கணக்கன முப்படையினர்கள் தமது வன்முறைகளை இளைஞர்கள் பக்கம் திருப்புவார்கள் என்பதை உணர்ந்திருந்தோம். மேற்கத்திய எழுத்தாளரான நான்சி முர்ரே, அக்காலத்தில், சீருடை அணிந்த பாதுகாப்புப் படையினரும் சாதாரண உடையில் இருந்த குண்டர்களும் நன்கு திட்டமிடப்பட்ட சில அழிப்புச் செயல்களை மேற்கொண்டனர் என்று எழுதினார்.

அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட சில இலக்குகளைத் தரைமட்டமாக எரித்தனர் - அதில் 95,000 தொகுதிகளையும் விலைமதிப்பற்ற கையெழுத்துப் பிரதிகளையும் கொண்ட யாழ்ப்பாணப் பொது நூலகமும் அடங்கும்... தமிழர்களின் பண்பாட்டு அடையாளத்தின் சின்னமான அந்த நூலகம் எரிக்கப்பட்டது உட்பட, இதுபற்றி தேசிய செய்தித்தாள்களில் எந்தக் குறிப்பும் வெளிவரவில்லை. அரசாங்கம் அவசரகால ஆட்சியை அமல்படுத்துவதை ஜூன் 2 ஆம் தேதி வரை தாமதப்படுத்தியது, அதற்குள் முக்கிய இலக்குகள் அழிக்கப்பட்டிருந்தன. இரண்டு இரவுகளாகத் தடையின்றி எரிப்பு தொடர்ந்தது.

நான் பரந்தன் இரசாயன தொழிற்ச்சாலையின் ஊழியராகவும், இலங்கை வர்த்தக தொழிற்சங்கத்தின் வடக்கு மாகாண பிரதிநிதியாகவும், ஈழநாடு பத்திரிகையின் பகுதி நேர பத்திரிகை நிருபராகவும்

இருந்த அக்காலத்தில் தான், TULF தலைமையகம் மற்றும் ஈழநாடு நாளிதழ் அலுவலகங்கள் உட்பட, யாழ்ப்பாண நகரம் முழுவதும் உள்ள வீடுகளும் கடைகளும் கும்பலால் தீக்கிரையாக்கப்பட்டன.

அறிஞரும் சமூகத் தலைவருமான அருட்தந்தை தாவீது, தனது அன்புக்குரிய நிறுவனம் எரிக்கப்பட்ட அதே இரவில் அதிர்ச்சியின் உச்சக்கட்டம் அவர் மாரடைப்பால் மரணமடைந்தார். நூலக முற்றத்தில் உள்ள அவரது சிலை கூறும் உண்மை என்னவெனில், அவரது மறைவு, அன்று வாழ்ந்த தமிழ் தேசத்தின் ஒவ்வொரு உறுப்பினரும், அதன்பின் பிறந்த ஒவ்வொரு தலைமுறையினரும் அனுபவித்த இழப்பின் அடையாளமாக விளங்குகிறது: நினைவுகளின் மீளமுடியாத இழப்பு; நமது முன்னோர்களின் வாழ்வும் மரணமும், அவர்கள் உருவாக்கிய அழகும், அவர்கள் ஏற்படுத்தியிருக்கக்கூடிய அழிவும் என்பதே.

தற்போதுள்ள அனுர குமார திஸாநாயக்க அரசுக்கு முன்னர் இருந்த சிங்கள அரசுகள் காலத்தில், ஒரு பத்திரிகையாளராக இருப்பதற்கு, இலங்கை உலகின் மிகவும் அபாயகரமான இடங்களில் ஒன்றாக இருந்தது. தமிழ் பத்திரிகையாளர்கள் குறிப்பாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றனர்; ஆயுத மோதலின் போதும் அதற்குப் பின்னரும் குறைந்தது 41 ஊடகப் பணியாளர்கள் இலங்கை அரசாலோ அல்லது அதன் துணை இராணுவப் படைகளாலோ கொல்லப்பட்டார்கள்.

குறிப்பு: யாழ்ப்பாணப் பொது நூலகம் குறித்த வரலாற்றில் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் இரு கத்தோலிக்க தூண்களான: 01. அருட் தந்தை லோங் அடிகளார். 02. அருட் தந்தை தாவீது அடிகளார் குறித்து யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க சமூகம் மௌனம் காத்து வருவது மிகவும் கவலைக்குரியது.

இந்த இருபெரும் நூலக தூண்களுக்கு யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் சிலை வைத்ததையும், ஒவ்வொரு ஆண்டும் யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிந்த நாளில் அவர்களை நினைவு கூர்வதையும் தவிர, தமிழ் மக்களினதும், இழம் தலைமுறையினரதும் இதயங்களுக்கும், அறிவுக்கும் இவர்களுடைய பங்களிப்பு மற்றும் உழைப்பு, தியாகம், கனவு இவைகளை இன்னும் கொண்டு சேர்க்காதது ஏன்?


அண்மையில், (மே 2026), யாழ்ப்பாணப் பொது நூலகத்தலிருந்து வந்த செய்தி: யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் தந்தை தாவீது அடிகளார் குறித்த புத்தகங்களை தேடிய போது, நால் ஐந்து பக்கமுள்ள ஒரு சிறு குறிப்பு துண்டு மாத்திரமே இருந்ததாக கேள்வியுற்றேன். அதுவும் பத்தோடு பதினொன்றாக சாதாரண நூல்களோடு அது காணப்பட்டது. ஆனால் டக்ளஸ் தேவானந்தாவின் புத்தகம், அதுவும் யாழ்ப்பாணப் பொது நூலக விசேட பகுதியில் வைக்கப்பட்டுள்ளது. இது ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திற்குமே அவமானத்தை ஏற்படுத்தி தருகின்றது, அதிலும், யாழ் கத்தோலிக்க மறைமாவட்டத்திற்கே இது இழுக்கான ஒரு சம்பவம் என்பதை நான் இங்கே பதிவு செய்கின்றேன்.

தந்தை செல்வா யாழ்ப்பாண பொது நூலக ஸ்தாபகர் என்றும், 1800 ரூபாய் முதல் நிதியாக யாழ் நூலக ஸ்தாபகத்திற்காக பங்களிப்பு செய்தார் என்றும், ஆரம்பத்தில் ஒரு சிறிய குடிசையிலேயே யாழ் நூலகம் ஆரம்பிக்கப்பட்டது என்று இணையம் முழுவதும் செய்திகள் காணப்படுகின்றது.

ஆனால் இன்று நாம் காணும் பிரம்மாண்டமான யாழ்ப்பாண நூல் நிலைய கட்டடத்தின் சொந்தக்காரன் அருட்தந்தை லோங் அடிகளார் என்றும், எரியூட்டப்பட்ட புத்தக பொக்கிஷத்தின் சொந்தக்காரர் அருட்தந்தை தாவீது அடிகளார் என்றும் எத்தனை பேருக்குத் தெரியும்?

இவர்கள் இருவருக்கும் சிலைகள் வைத்திருப்பதோடு மட்டும் நிறுத்தி விட முடியுமா இவர்களுடைய தியாகங்களையும் பங்களிப்பையும் அல்லது சிலைகளுக்கு பின்னால் இருக்கக்கூடிய இவர்களுடைய தியாகங்களையும் பங்களிப்புகளையும் வெளிக்கொணர்வதில், ஒவ்வொரு தாயக தமிழனுக்கும் தலையாய கடமை உண்டு.

தமிழர் தாயகத்தின் ஒவ்வொரு தமிழ் குழந்தையும் நம் அறிவுத்தந்தையர்கள், அருட்தந்தை லோங் அடிகளார் மற்றும் அருட் தந்தை தாவீது அடிகளார் இவர்களின் புகழ் பரப்புவோம். இதன் மூலம், ஒவ்வொரு தமிழ் குழந்தையும் இவர்கள் பாத அடிகளை பின்பற்றி, தமிழ் வளர்க்கும் வாஞ்சை பெறச் செய்வோம். ஆசிரியர் திரு டேவிட் தோமஸ்




## உலக இளைஞர் தினம்
## சியோல் தென் கொரியா 2027

உலக இளையோர் தினம் (WYD) என்பது திருத்தந்தையுடன் நடைபெறும் ஒரு உலகளாவிய கத்தோலிக்க ஒன்றுகூடல் ஆகும்.

இது சர்வதேச அளவில் சில ஆண்டுகளுக்கு ஒரு முறையும், உள்ளூரில் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது. அடுத்த சர்வதேச ஒன்றுகூடல், தென் கொரியாவின் சியோல் நகரில், ஆவனி மாதம் 3 முதல் 8, 2027 வரை நடைபெறும்.

நிகழ்வின் கண்ணோட்டம்: நோக்கம்: விசுவாசத்தை ஆழப்படுத்தவும், உலகெங்கிலும் உள்ள இளைஞர்களை ஒன்றிணைக்கவும் வடிவமைக்கப்பட்ட ஒரு முக்கிய இளையோர் விழா மற்றும் ஆன்மீக யாத்திரை ஆகும்.

இலக்கு பார்வையாளர்கள்: முதன்மையாக இளம் வயது வந்தவர்கள் மற்றும் பதின்ம வயதினரை (பொதுவாக 16-35 வயது) இலக்காகக் கொண்டது, இருப்பினும் அனைத்துப் பின்னணியிலிருந்தும் வரும் மக்களுக்கும் இது திறந்திருக்கும்.

செயல்பாடுகள்: மறைக்கல்வி அமர்வுகள், தினசரி திருப்பலி, ஆராதனை, இசை நிகழ்ச்சிகள், கலாச்சார நிகழ்வுகள், மற்றும் திருத்தந்தையுடன் ஒரு நிறைவுத் திருப்பலி மற்றும் இரவுத் திருப்பலி ஆகியவை இதில் அடங்கும்.

இடம்: சியோல், தென் கொரியா.

திகதிகள்: ஆவனி 3–8, 2027.

கருப்பொருள்: தைரியம் கொள்ளுங்கள்! நான் உலகத்தை வென்றுவிட்டேன். (யோவான் 16:33)

வரலாறு மற்றும் நிகழ்வுக்காலம்: 1985-ல் திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் அவர்களால் நிறுவப்பட்டது.

உலகளாவிய ஒன்றுகூடல்கள்: ஒவ்வொரு 2 முதல் 4 வருடங்களுக்கும் ஒரு வெவ்வேறு புரவலர் நகரத்தில் நடத்தப்படுகிறது. சமீபத்திய இடங்களில் போர்ச்சுகலின் லிஸ்பன் (2023), பனாமாவின் பனாமா நகரம் (2019), மற்றும் போலந்தின் கிராகோ (2016) ஆகியவை அடங்கும்.

உள்ளூர் கொண்டாட்டங்கள்: உலகெங்கிலும் உள்ள உள்ளூர் மறைமாவட்டங்களிலும் ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது, பொதுவாக நவம்பர் மாத இறுதியில் வரும் கிறிஸ்து அரசர் பெருவிழாவின் போது.

எவ்வாறு பங்கேற்பது: பெரும்பாலான சர்வதேச யாத்திரிகர்கள் தங்கள் உள்ளூர் பங்கு, மறைமாவட்டம் அல்லது கத்தோலிக்க இளைஞர் பணி மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு குழுவில் சேர்ந்து பங்கேற்கின்றனர்.

செய்திகளைப் பின்தொடர, உங்கள் குழுவைப் பதிவு செய்ய, அல்லது அதிகாரப்பூர்வ ஜெபத்தைக் காண : அதிகாரப்பூர்வ உலக இளைஞர் தின இணையதளத்தைப் பார்வையிடவும். ஆசியாவில் நடைபெறவிருக்கும் நிகழ்வு குறித்த நேரடி அறிவிப்புகளுக்கு, WYD சியோல் 2027 இணையத்தைப் பார்க்கவும்.